ஐக்கங்கள் 4 விலை சதம் 40 ★

# ஈழநாடு
The EELA NADU

மலர்: 19 ஆவணி 14 நமழன் 14 இதழ் 199
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 30-8-77

முக்கிய அறிவித்தல்

மில்க்வைற் தயாரிப்புகள்

எங்கள் தயாரிப்புகள் யாவும் மேலுறைகளுடன் கிடைக்கும். எவற்றுக்கும் நாங்கள் விலை கூட்டவில்லை.

தொழிலதிபர்

# யாழ். நகரில் இன்று கடைகள் திறக்கும்!

## நகைக் கடைகளை திறக்க அவகாசம்

### லொறிகள் செல்வதற்கும் மறுப்பு; ரோந்துக் காவலில் அரச ஊழியரும்

யாழ்ப்பாணம், செவ்

யாழ். நகரில் இன்று வழமைபோல் வர்த்தகர்கள் கடைகளைத் திறந்து வியாபாரம் செய்வதற்கு ஒப்புக்கொண்டுள்ளனர் ஆனாலும் யாழ். கன்னாதிட்டிப் பகுதியிலுள்ள நகைக்கடைகளைத் திறப்பதற்கு நகை வியாபாரிகள் இன்னும் சம்மதம் தெரிவிக்கவில்லை.

### ரோந்துக்காவலில் அரச ஊழியர்

யாழ். நகரில் பொலிஸ் இராணுவம் இரவிலும் பகலிலும் ரோந்துக்காவலில் ஈடுபடும். இதேசமயம் பொலிசாருடனும் இராணுவத்தினருடனும் அரசாங்க ஊழியரும், வர்த்தகர் சம்மேளனத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளும் இணைந்து இக்காவலில் ஈடுபடுவார்கள்.

இந்த ரோந்துக்காவலில் லயன்ஸ், ரோட்டரி, வைமன்ஸ் கழகங்கள் போன்ற பொதுச் சேவைக்கழகங்களின் பிரதிநிதிகளும் பங்குபற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம் யாழ். நகரில் உள்ள கொம்மேஷல் பாதுகாப்புச் சேவையினர் தமதுவழமையான கடமையைத்தொடர்ந்து செய்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

ரோந்துக்காவல் ஏற்பாடுகள் தவிர முக்கியமான இடங்களில் ஆயுதந்தாங்கிய பொலிசார் காவல்புரிவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ரோந்துக் காவலில் செல்பவர்களும் முக்கிய இடங்களில் காவல்செய்வதற்குச் செல்பவர்களும் உயர் பொலிஸ் அதிகாரியுடன் தொடர்புகொள்வதற்கும், கடைகளைத் திறந்துவைத்துள்ளவியாபாரிகள் தங்களுக்கு ஏற்படக்கூடிய தொல்லைகளைப் பற்றி உடன் உயர் பொலிஸ் அதிகாரிகளுடன் தொடர்புகொள்வதற்கும் வசதிசெய்து கொடுக்கப்பட்டுள்ளது.

### லொறிச்சாரதிகள் மறுப்பு

யாழ்ப்பாணத்திலிருந்து வெங்காயம் மிளகாய் போன்ற உபஉணவுப் பொருள்களை யாழ் குடாநாட்டுக்கு வெளியே கொண்டுசென்று பின்னர் அங்கிருந்து சீனி, மா போன்ற பொருள்களை இங்கே கொண்டு வரலாமென்று யாழ். கச்சேரியில் நேற்று நடைபெற்ற ஒரு மகாநாட்டில் கூறப்பட்ட யோசனையை லொறிச் சாரதிகள் தமது பாதுகாப்பைக் கருதி மறுத்துவிட்டதாகத் தெரிகிறது.

### புனர் வாழ்வு யோசனை

வன்முறைச் சம்பவங்களால் பாதிக்கப்பட்டு யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ள அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ளவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கான திட்டங்களைத் தீட்டுவதில் தமிழர் விடுதலைக் கூட்டணியினரும் மற்றும் பொதுச்சேவை ஸ்தாபனங்களும் ஈடுபட்டுள்ளன.

அகதி முகாம்கள் பலவும் தனித்தனியாக நிறுவப்பட்டுள்ளதால் மோசடிகள் நடைபெறுவதாகவும் இவற்றைத் தடுக்கும் பொருட்டுப் பல முகாம்களுக்குப் பதிலாக இரண்டொரு முகாமை மட்டும் வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுவதாகவும் அறியப் படுகிறது.

## டெஸ்ட் கிரிக்கெட்

லண்டன், ஆக. 29

இங்கிலாந்துக்கும் ஆஸ்திரேலியாவுக்குமிடையே ஓவல் மைதானத்தில் நடைபெறும் ஐந்தாவதும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட்டில் நான்காவது நாளான இன்று ஆஸ்திரேலியா தனது முதல் இன்னிங்ஸில் (ஆட்டநேர இறுதி வரை) 6 விக்கட்டுகள் நஷ்டத்துக்கு மொத்தம் 226 ஓட்டங்கள் எடுத்தது. இங்கிலாந்து தனது முதல் இன்னிங்ஸில் மொத்தம் 214 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

## உடைந்த சிலைகள் வரிசையில்......

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்நகரில் உடைக்கப்பட்ட சிலைகளின் வரிசையில் குருநகர் மக்களின் அன்புக்குப் பாத்திரமான ஆசிரியர் ஜேமாஸின் சிலையும் அடங்கும். குருநகரில் கடற்கரை வீதி, தண்ணீர்த்தாங்கி வீதிச் சந்தியில் அமைந்திருக்கும் இச்சிலை தலை இழந்த முண்டமாகக் காட்சியளிக்கின்றது. (கூ-அ)

• • •

## யாழ். வங்கிகள் வேலை நேரம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

நாட்டில் அமைதி ஏற்பட்டு மீண்டும் பழைய நிலை ஏற்படும் வரை யாழ். நகர வங்கிகள் காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை மட்டுமே நடைபெறுமென்று வங்கி வட்டாரப் பிரமுகர்கள் அறிவித்தனர். (கெ-அ)

## தமிழ் மன்றம் வாழ்த்து

யாழ்ப்பாணம், செவ்.

யாழ். வளாகத் தலைவராக நியமனம் பெற்றுள்ள பேராசிரியர் சு. வித்தியானந்தனுக்கு யாழ். வளாகத் தமிழ்மன்றம் வாழ்த்துத் தெரிவித்துள்ளது.

புதியதலைவர் திரு. சு. வித்தியானந்தன் தமது கடமைகளைச் சிறப்புற நிறைவேற்றுவதற்குக் கழகம் தன்னால் இயன்ற உதவிகளையும் ஒத்துழைப்பையும் வழங்குமென்றும் அதன்வாழ்த்துச்செய்தியில் தெரிவித்துள்ளது. (அ)

## தினம் தினம் அதிகமானவர்கள் கைது செய்யப்படுகின்றனர்!

(கொழும்பு)

கடந்த இரண்டு வாரங்களாக நாட்டின் நாலாபக்கங்களிலும் தலைதூக்கிய வன்செயல்கள், கலவரங்கள் காரணமாக இதுவரை 4,000க்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தினந்தினம் பலரும் கைது செய்யப்படுகின்றனர். முக்கிய அரசியல்வாதிகள் தொடர்ந்தும் வீட்டுக்காவலில் வைக்கப் பட்டுள்ளனர்.

112 பேர் பலியாகியிருப்பதாகத் தெரிகிறது.

நேற்றும், நேற்று முன்தினமும் கொழும்பில் எந்தவித அசம்பாவிதமும் நிகழவில்லை. நாட்டின் வேறு சில பகுதிகளில் சில அசம்பாவிதங்கள் நடைபெற்றதாக அறிவிக்கப் பட்டது.

இதுவரை கிடைக்கப்பெற்ற புள்ளி விபரங்களின்படி, பல லட்சக்கணக்கான ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

## துப்பாக்கிச் சூடு: நால்வர் பலி!

### மாங்குளத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

நாட்டில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களை அடுத்து மாங்குளம் பகுதியில் இருந்து சில அகதிகளை ஏற்றிக்கொண்டு மன்னார் நோக்கிச் சென்றுகொண்டிருந்த லொறி ஒன்றின் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டதில் நால்வர் கொல்லப்பட்டுள்ளனர்.

மாங்குளத்தில் இருந்து மன்னார் நோக்கி இந்த லொறி வந்துகொண்டிருந்த சமயம் வவுனிக்குளம் பகுதியில் திடீரெனஇந்த லொறியைநோக்கித் துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டதாகவும் இதனால் இந்த லொறியில் காவலுக்காகச் சென்ற மாங்குளம் பொலிசைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் என்ற தமிழ் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் மூன்று தமிழ் அகதிகளும் கொல்லப்பட்டதாகவும் தெரிகிறது.

இச்சூட்டுச் சம்பவத்தை அடுத்து [illegible] பாப்பு ஏற்பட்டுள்ளதாகவும் உயர் பொலிஸ் அதிகாரிகள் ஸ்தலத்திற்கு விரைந்துள்ளதாகவும் தெரிகிறது. (கா)

கடற்படையினரால்

## கைதான இளைஞர்கள் 5 பேரும் பிணையில் விடுதலை

யாழ்ப்பாணம், செவ்.

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 5 இளைஞர்கள் நேற்று தலா 2000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

யாழ். நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் கே. வி, நவரத்தினம் முன்னிலையில் நேற்றுக்காலை சந்தேக நபர்களான 5 இளைஞர்களும் ஆஜர் செய்யப்பட்டனர் சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணிகளான ஆர். விஸ்வநாதன் என். ஸ்ரீகாந்தா ஆகியோர் ஆஜரானார்கள்.

சந்தேக நபர்களான உரும்பராயை சேர்ந்த அ. பாஸ்கரன், கு சுந்தரலிங்கம் கு. ஜெயக்குமார், எம். அந்தோனிப்பிள்ளை, சு ரவீந்திரன் ஆகியோர் இம்மாதம் 17-ம் திகதி கடற்படையினரால் கொக்குவிலில் கைதுசெய்யப் பட்டனர்.

சந்தேகத்தின் பேரில் வாகனம் ஒன்றை மறித்தபோது அதிலிருந்த சிலர் தப்பிச் சென்றுவிட்டபின் சந்தேக நபர்களான 5 இளைஞர்களை கடற்படையினர் கைதுசெய்ததுடன் துப்பாக்கிகளையும் தோட்டாக்களையும் வாள், கத்தி, ஒருகலன் பெற்ரோல், சாவி ஆகியவற்றையும் காரிலிருந்து கைப்பற்றினார்கள்.

சந்தேக நபர்களான ஐவரும் றிமாண்டில் வைக்கப் பட்டு, நேற்று நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்

நீதவான், இவர்களை பிணையில் செல்ல அனுமதித்து விசாரணையை அடுத்தமாதம் 6-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## புத்தளத்தில் பன்னிரண்டு மணிநேர ஊரடங்கு!

கொழும்பு, திங்கள்

ஊரடங்குச் சட்டத்தின் நேரம் இப்போது வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. என்றாலும் புத்தளம் மாவட்டத்தில் மாலை 6 மணி முதல் காலை 6 மணி வரை ஊரடங்கு அமுல் செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டம், புத்தளம் தவிர்ந்த நாட்டின் சகல பகுதிகளிலும் கடந்த இரவு 10 மணி முதல் இன்று அதிகாலை 4மணி வரை ஊரடங்குச் சட்டம் அமுல்செய்யப்பட்டிருந்தது. (இ)

## ஹமீத் தலைமைவகிப்பார்

நியூயோர்க், ஓக 29

அடுத்தமாதம் நியூயோர்க்கில் நடைபெறவுள்ள கூட்டுச்சேரா நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் விசேட மாநாட்டுக்கு இலங்கை வெளிநாட்டமைச்சர் ஜனாப் ஏ. ஸி எஸ். ஹமீத் தலைமைவகிப்பார்.

மத்திய கிழக்கு நெருக்கடி குறித்து ஆராயும்பொருட்டு கூட்டுச்சேரா நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்கள் மகாநாட்டை உடன்கூட்டுமாறு சிரிய வெளிநாட்டு அமைச்சர் விடுத்த அவசர கோரிக்கையை அடுத்து இம்மகாநாடு கூட்டப்படுகிறது. இம்மகாநாட்டில் கலந்துகொள்ளும் இலங்கைக்குழு அடுத்தவாரம் நியூயோர்க் செல்லுமென எதிர்பார்க்கப்படுகிறது. இக்குழுவில் இரண்டு எம். பீக்களும் அங்கம்வகிப்பரெனத் தெரிகிறது. (இ)

# தமிழ்நாட்டில்
## பஸ்ஊழியர் வேலைநிறுத்தம்
### கல்லூரிகள் மூடப்பட்டன

சென்னை, ஆக 29 தமிழ்நாட்டில் கடந்த சில தினங்களாக பஸ்போக்குவரத்து ஊழியர்கள் வேலைநிறுத்தம் மேற்கொண்டு வருவதால் தமிழ்நாட்டிலுள்ள சகல கல்லூரிகளையும் பாடசாலைகளையும் மூடிவிடுமாறு தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

வேலைநிறுத்தத்தை சமரசமாகத் தீர்த்து வைக்க அரசு முயற்சிகள் மேற்கொண்டு வரும் அதே வேளையில் நேற்று பஸ் சேவையைக்குழப்ப முயற்சித்ததாக பல்லவன் பஸ் போக்குவரத்து சேவையைச் சேர்ந்த 250 ஊழியர்களைப் பொலிசார் கைதுசெய்து காவலில் வைத்துள்ளனர். (இ)

## இந்தியா — இலங்கை தகவல் தொடர்பு

புதுடில்லி, ஆக. 29 இந்திய இலங்கை நேரடித் தகவல் தொடர்புக்கான புதிய திட்டம் ஒன்று இப்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இப்புதிய திட்டம் 1980-ம் ஆண்டளவில் பூர்த்தியாகும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் புதுடில்லி ச்செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்திட்டம் பூர்த்தியானதும் மதுரைக்கும் கொழும்புக்கும் இடையே 1818 லைன்களில் நேரடித் தொலைபேசி இணைப்புக்கள் ஏற்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## றிவால்வரைக் காட்டி துப்பாக்கி கொள்ளை

பண்டத்தரிப்பு, திங்கள் அளவெட்டியிலுள்ள வைத்திய அதிகாரி ஒருவருக்கு சொந்தமான லைசென்ஸ் உள்ள துப்பாக்கி ஒன்றை இரவுவேளையில் சென்ற வாலிபர் கோஷ்டி ஒன்று பயங்கர ஆயுதங்களைக் காட்டிப் பயமுறுத்தி எடுத்துச் சென்றுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு கார் ஒன்றில் அந்த வைத்திய அதிகாரியின் வீட்டிற்குச் சென்ற இந்த வாலிபர் கோஷ்டி அங்கு லைசென்ஸ் உடைய துப்பாக்கி ஒன்று இருப்பதாகவும் அதை எடுத்துத் தங்களிடம் ஒப்படைக்குமாறும் கேட்டதாம். அப்போது வைத்திய அதிகாரி அங்கிருக்கவில்லை. அவரது மனைவியும் பிள்ளைகளும் மட்டுமே அங்கு இருந்தனர். அக்கோஷ்டியில் வந்த ஒருவர் றிவால்வர் ஒன்றைக் காட்டி துப்பாக்கியை எடுத்துத்தரா விட்டால் சுடுவேசம் என்று பயமுறுத்தினராம். இதற்கு அஞ்சிய வீட்டார் துப்பாக்கியை எடுத்துக் கொடுத்தனராம். இதுதொடர்பாக மறுநாள் வைத்திய அதிகாரி சுன்னாகம் பொலிஸில் புகார்செய்துள்ளார். பொலிஸார் புலன் விசாரணை செய்துவருகின்றனர்,

## கொழும்புத் தபால்விநியோகம்

யாழ்ப்பாணம், செவ் கொழும்புத் தபால் நிலையத்தில் தேங்கிக் கிடந்த 300 தபால் பைகள் கடந்த வெள்ளிக்கிழமை மாலை புகையிரத மூலம் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தன. இதனை அடுத்து சனிக்கிழமை தரம் பிரித்தல் வேலைகள் நடந்து நேற்று இத்தபால்கள் விநியோகிக்கப்பட்டன. (கி-அ)


CLASSES
Percival Hall
Chapel Street
Jaffna.
REOPENS
On Thursday
1st September 1977
6911 Principal.

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 6-30, 2-30
ஏ.வி.எம் ராஜன்-பானுமதி
பத்துமாதபந்தம்

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 2 30, 6-30
ரஞ்சன் — அஞ்சலிதேவி
நீலமலைத் திருடன்

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30
சிவாஜி, மஞ்சுளா, தேவிகா, கமலஹாசன், ஜெயசித்ரா நடித்த
சத்யம்
(ஈஸ்ட்மன் கலர்)


## நியமனம்

நீர்வேலி, திங்கள் வலி-கிழக்குத் தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் குழுநெறியாளர் கலைக்கப்பட்டதை அடுத்து புதிய நெறியாளர் குழுவின் தலைவராக வலி-கிழக்கு பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு க. மாணிக்கவாசகரும் ஏனைய உறுப்பினர்களாக தலைமைக் காரியாலயப் பரிசோதகர் திரு கே. எஸ். அழகரத்தினம் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகஸ்தர் திரு எஸ். செல[illegible]த்தினம் ஆகியோரும் நியமிக்கப் பெற்றுள்ளனர். (அ)

ஃ ஃ ஃ

மன்னார், திங்கள் மன்னார் மாவட்டத்தில் காணி விவசாய அமைச்சரால் கலைக்கப்பட்ட 12 விவசாய விளைவுப் பெருக்கக் குழுக்களுக்குத் தேர்தல் மூலம் புதிய குழுக்கள் தெரிவு செய்யப்படும் வரை அவ்வப்பகுதியின் பிரதேச விவசாய அதிகாரிகள் வி. வி. பெருக்கக் குழுத்தலைவராக காணி விவசாய அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயக்காவினால் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இதன்படி பொற்கேணி சிலாவத்துறை ஆகிய விவசாயப் பிரதேசங்களின் விவசாய விளைவுப் பெருக்கக்குழுத் தலைவராக அப்பிரதேசத்தின விவசாய அதிகாரி திரு எம் எல். எம். இக்பாலும் முருங்கன், உயிலங்குளம், நானாட்டான் வி. வி. பெ குழுத்தலைவராக பிரதேச விவசாய அதிகாரி திரு என. யோகநாதனும் நியமிக்கப்பட்டுள்ளவர். (அ)

## அவசர ஆயுதப்படையை அரபு நாடுகள் நிறுவும்

கெய்ரோ, ஆக. 29 அரபு அவசர ஆயுதப்படை ஒன்றை உருவாக்க அரபுநாடுகள் தீர்மானித்துள்ளன.

அரபு நாடுகளிடையே அவ்வப்போது ஏற்படும் மோதலைத் தவிர்த்து அங்கு சமாதானத்தை ஏற்படுத்த இந்த அவசர ஆயுதப்படை பயன்படுத்தப்படும் என்று எகிப்திய உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உத்தேச ஆயுதப்படையை அமைப்பது தொடர்பான கூட்டம் ஒன்று இம்மாதம் 3.ம் திகதி கெய்ரோவில் நடைபெறவுள்ளது.

அரபு நாடுகளின் வெளி அமைச்சர்கள் இம்மகாநாட்டில் கலந்து கொள்வார்கள்.

# 5வது தடவையாக சிறைசெல்கிறார்

வேலணை, திங்கள் பசுமாடொன்றைத் திருடிய பிரபல திருட்டுப் பேர்வழி 5-வது தடவையாகச் சிறைவாசம் செல்கிறார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சண்முகர் முருகையா என்ற இத்திருட்டுப்பேர்வழி புங்குடுதீவில் உள்ள அழகம்மா என்பவரது பொறுப்பில் இருந்த முன்னூறுரூபா பெறுமதியான மாட்டைக் களவாடியதாகக் குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கு வேலணை சுற்றுலா நீதிமன்றத்தில் நீதிபதி திரு. வை. ஜெயசோதியினால் விசாரிக்கப்பட்டு எதிரிக்கு ஒன்றரைவருடக் கடூழியச் சிறைத் தண்டனையும் 2 வருடப் பொலிஸ் கண்காணிப்பும் வழங்கப்பட்டது.

மேற்படிநபர் 1969-ம்ஆண்டு வீடொன்று உடைத்துக் களவாடிய குற்றத்திற்காக வத்துப்பிட்டிவெல என்ற இடத்தில் பாலிய குற்றவாளியாக 3வருடமும், 72-ம் ஆண்டு புத்தளத்தில் 1897 ரூபா பெறுமதியான நகைகளைத் திருடிய குற்றத்திற்காக 6மாதச்சிறைத் தண்டனையும், 74-ம் ஆண்டு சாவகச்சேரியில் வெங்காயமும் சாக்குகளும் களவெடுத்த குற்றத்திற்காக ஒருவருடச் சிறைத் தண்டனையும், அதேவருடம் கிளிநொச்சியில் 700 ரூபா களவெடுத்த குற்றத்திற்காக 1வருடச்சிறைத்தண்டனையும்பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது

நீதிபதி தீர்ப்பு வழங்குகையில் குற்றவாளியைப் பார்த்து 'உமதுவாழ்நாளில் அநேகமான நாட்களைச் சிறையில் கழித்துவந்திருக்கிறீர்' இனி மேலாவது இச்சிறைத்தண்டனையை அனுபவித்துத் திருந்துவீர் என நான் நம்புகிறேன்' என்று கூறினார். (அ)


சாந்தி
யாழ். நகர்
போன்: 7642
ஃ எம். ஜி. ஆர்.
ஃ சாவித்திரி நடித்த
தினசரி 10-30, 2-30.
வேட்டைக்காரன்

மனோஹரா
(யாழ்ப்பாணம்)
தினசரி 10-30 2-30
எம். ஜி. ஆர். - லதா-நாகேஷ்
அறிமுகம் பவானி
நடித்த
உழைக்கும் கரங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)

ராஜா
(யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30
போன்: 7180
முத்துராமன்-சுஜாதா
விஜயகுமார் - படாபட் ஜெயலக்ஷ்மி
நடித்த
மயங்குகிறாள் ஒரு மாது

ராணி
[யாழ்ப்பாணம்]
தினசரி 10-30, 2-30
சிவாஜி - கே. ஆர். விஜயா
நடித்த
ராமன் எத்தனை ராமனடி
(புதிய பிரதி)
எமது அடுத்த வெளியீடு
பெண் தெய்வம்


## உணவு உடை வழங்கினர்

பண்டத்தரிப்பு திங். சங்கானை மேற்கு சனசமூக நிலையத்தினர் வெளிமாகாணங்களில் நடைபெற்ற சம்பவங்களினால் பாதிக்கப்பட்டு யாழ்ப்பாணம் கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் தங்கியிருக்கும் அகதிகளுக்கு உணவு பொருட்களையும் உடைவகைகளையும் சேகரித்து நேரில் சென்று வழங்கினர்.

## தீவுப்பகுதி மண்வளத்தை ஆராய நடவடிக்கை

வேலணை, திங். தீவுப்பகுதியில் உள்ள மண்வளத்தை ஆராய்ந்து மண்ணின் வளத்திற்கேற்ப பயிர் வகைகளை மேற்கொள்ளுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு வேலணை கிழக்குக் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் திரு. ஆ. கேதாரநாதன் முன்வந்துள்ளார்.

சென்ற காலங்களில் தீவுப்பகுதியைப் பெறுத்தமட்டில் செய்யப்பட்ட மிளகாய், வெங்காயம், போன்ற பல உணவுப் பயிர் வகைகள் பூச்சி, புழுத் தாங்களால் அழிவுற்றுள்ளதுடன், மண்ணின் தன்மைகளினாலும் அழிவுற்றதைத் தொடர்ந்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருக்கிறது

இலங்கையில் இருக்கும் விவசாயத்துடன் சம்பந்தப்பட்ட கம்பெனிகளுடன் இணைந்து தீவுப்பகுதி மண்வளத்தை ஆராய்ந்து அதற்கேற்ப பயிர் வகைகளை செய்விக்க விவசாயிகள் ஊக்கப்படுத்தப்படுவார்கள். (அ)


மலேஷியன் கைமார் சாம்பிராணி
கிடைக்குமிடம்:
சென்ற் அந்தனிஸ்
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
லிமிட்டெட்
கொழும்பு-10
போன்: 24261—5

ஸ்ரீதர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30
ஜெய்சங்கர்-கே. ஆர். விஜயா
நடித்த
பட்டணத்தில் பூதம்
(கறுப்பு வெள்ளைப் பிரதி)
எமது அடுத்த வெளியீடு
சிவகுமார் சுஜாதா
அன்னக்கிளி

வெலிங்டன் [யாழ் நகர்]
தினசரி 10 30, 2-30
விஜயகுமார் ஜெய்சித்ரா
தாய் இல்லாக் குழந்தை

ஸிடோ போன்: 7695
(யாழ். நகர்)
ஜெய்சங்கர்—சுஜாதா
நீ ஒரு மகாராணி

நிற்சாமம் கொலைவழக்கு:

# சிங்கள ஜூரர்கள்வராததால் விசாரணை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செவ்

சிங்கள ஜூரிசபை உறுப்பினர்கள் வராததினால் நிற்சாமம் கொலைவழக்கு விசாரணை பின் போடப்பட்டது.

இவ்வழக்கு நேற்றுக்காலை யாழ்.மேல்நீதிமன்றத்தில் நீதிபதி ஜனுப் எம் எம். அப்துல் காதர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் நிற்சாமத்தில், க. நடேசு, க. இராசரத்தினம் க. விக்னராசா சி. பழனி, சி. துரைசிங்கம், ந தருமலிங்கம் ஆகியோர் சட்டவிரோத கூட்டத்தில் உறுப்பினராக இருந்து வன்னியன் சின்னத்தம்பியை கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது,

எதிரிகள்சார்பில் சட்டத்தரணி ஆர். ஈ. தம்பிரத்தினம் ஆஜரானார். அரசதரப்பில் சட்டத்தரணி க. ஜெயக்குமார் வழக்கை நடத்தினார்.

சிங்களம்பேசும் ஜூரிசபை முன் வழக்குவிசாரணை செய்யப்படவேண்டுமென எதிரிகள் தெரிவித்திருந்தனர்.

சிங்களம்பேசும் ஜூரிகள் நேற்று நீதிமன்றத்திற்கு வராததினால், விசாரணை அடுத்தமாதம் 21-ம் தேதிக்குப் பின்போடப்பட்டுள்ளது. (க)

# யாழ். சட்டத்தரணிகள் நீதிமன்றம் திரும்பினர்

யாழ்ப்பாணம் செவ்.

யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் தங்கள் பகிஷ்கரிப்பை கைவிட்டு நேற்று நடந்த நீதிமன்ற விசாரணைகளில் பங்குபற்றினர்கள்

நேற்றுக்காலை யாழ். மேல் நீதிமன்ற, நீதவான் நீதிமன்ற விசாரணைகள் நடைபெற்றது சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் ஆஜரானார்கள்.

யாழ் சட்டத்தரணிகள் சங்கம். சங்கத்தலைவர் திரு. அ முத்துக் கிருஷ்ணன் தலைமையில் நேற்றுக் கூடி நிலைமை பற்றி ஆராய்ந்தது.

நிலைமை சீரடைந்து வருவதால் சட்டத்தரணிகள் நீதிமன்ற விசாரணைகளிலும், மற்றும் கடமைகளிலும் கலந்து கொள்வதென ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

சட்டத்தரணி திரு. எஸ். அமிர்தலிங்கம் கொண்டு வந்த இத் தீர்மானத்தை சட்டத்தரணி ஆர். விஸ்வநாதன் அனுமதித்தார்.

கடந்த ஒருவாரகாலமாக சட்டத்தரணிகள் விசாரணைகளை பகிஷ்கரித்து வந்தனர். (க)

# "அந்தாதிகளைப் படிக்கவும் நாம்நேரம்ஒதுக்கவேண்டும்"

## நூல் வெளியீட்டுவிழாவில் 'அமிர்'

மாவிட்டபுரம், திங்கள்

"எமது அரும்பெரும் பொக்கிஷங்களான அந்தாதி போன்ற நூல்கள் எமது மனதிற்குச் சிறந்த பயிற்சியையும் கட்டுப்பாட்டையும் அளிக்கவல்லன. ஆகவே எமது வாழ்நாளில் அந்தாதிகளைப் படிக்க ஒரு பகுதி நேரத்தை ஒதுக்கிக் கொள்ளுதல் அவசியம். பயிற்சியும், கட்டுப்பாடும் அற்ற வாழ்க்கை உண்மையான வாழ்க்கையாகாது. அதன் மூலம் நாம் விரும்பும் இலட்சியத்தையும் அடையமுடியாது"

இவ்வாறு மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் இடம்பெற்ற "மாவை யமக அந்தாதி" நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு நூலை வெளியிட்டு வைத்துப் பேசிய தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபரும் எதிர்க்கட்சித்தலைவருமான திரு. அ அமிர்தலிங்கம் கூறினார்.

பிரமஸ்ரீ சு. து. சண்முகநாதக்குருக்கள் தலைமையில் நடந்த இவ்விழாவில் திரு. அமிர்தலிங்கம் நூலை வெளியிட்டுவைக்க வட்டுக்கோட்டைத் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசு முதற் பிரதியைப் பெற்றார்.

திரு அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

'சைவமும் தமிழும் நமது இருகண்கள். அவற்றைப் பேணிப் பாதுகாக்காவிட்டால் நாம் கண்ணிருந்தும் குருடர்களாகவும் உயிர் இருந்தும் நடைப்பிணங்களாகவும் இருக்கிறோம் என்பதுதான் அர்த்தம். அரசியல் சூறவளியில் சிக்கித் தவிக்கும் என்போன்றவர்களுக்கு இதுபோன்ற சைவத்தமிழ்ப் பொக்கிசங்கள் நடுக்கடலில் தத்தளிக்கும் ஒருவனுக்கு நல்லதோர் துடுப்புக் கிடைத்தது போலாகும்

பண்டைக்காலத்தில் தமிழ் அரசர்கள் எமது புலவர்கள், அறிஞர்களைப் பாராட்டிக் கௌரவித்து அவர்களுக்கு ஆக்கம் கொடுத்தனர். ஆனால் அந்நியப் படையெடுப்புகளால் எமது தமிழ் மன்னர்களது ஆட்சி அஸ்தமித்தபின்னர் ஆதீனங்களும், தனவந்தர்களும்தான் அவர்களுக்கு ஆக்கம் கொடுத்து வந்திருக்கிறார்கள்- இந்த வழியில் மாவை ஆதீனமும், தொழிலதிபர் திரு. சின்னத்தம்பியும் 90 வருடத்திற்கு முந்திய இந்நூலைக் கண்டுபிடித்து அதற்கு உரையும் எழுதுவித்து வெளியிட்டமை பெரிதும் பாராட்டத்தக்கது."

பண்டிதர் இ. நமசிவாயமும் பேசினார். (அ)

இந்தத் தவறணைகள்

## அகற்றப்படும்

உடுப்பிட்டி, திங்கள்

யாழ் மாவட்டத்தில் கமத்தொழிற் சேவை நிலையங்களுக்கு அருகில் அமைந்துள்ள கள்ளுத்தவறணைகள் அகற்றப்படவுள்ளன.

விவசாயக்காணி அமைச்சின் கிராமியத் தாபனங்களும், உற்பத்திச் சட்டப் பிரிவும் உதவிப் பணிப்பாளர் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

விவசாயிகள் கமத்தொழில் சேவை நிலையங்களில் தமது கருமங்களைக் கவனிக்க வரும்போது இக்கள்ளுத் தவறணைகள் அவர்களது கவனத்தை ஈர்த்துவிடுவதால் அநாவசிய இடைஞ்சல்கள் ஏற்பட்டு வருவதாகப் புகார்கள் கிடைத்து வந்ததைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாம்.

'தீவுப்பகுதிப்பிரயாணிகள்

# இந்தபஸ்களில்ஏற அஞ்சுகிறார்களாம்'

வேலணை, திங்.

தீவுப்பகுதிச் சேவையில் ஈடுபட்டுவரும் இ போ. ச. பஸ் சாரதிகள் சிலர் பண்ணைத் தாம்போதியைப் பொருட்படுத்தாமல் அதிவேகமாக பஸ்களைச் செலுத்துகின்றார்களாம் குறிப்பாக இவ்வீதியால் செல்லும் வாகனங்கள் அனைத்தும் 20 மைல் வேகத்திற்குமேல் செல்லக்கூடாது என எச்சரிக்கை அறிவித்தல் போட்டிருந்தும் இந்த எச்சரிக்கை அறிவித்தல்களைக் கவனிக்காமல் சாரதிகள் வாகனங்களை அதிவேகமாகச் செலுத்தி வருவதாகவும், இந்தச் சாரதிகள் செலுத்தும் பஸ்களில் பிரயாணம்செய்யப் பிரயாணிகள் அஞ்சுவதாகவும் இ. போ ச. அதிகாரிகளுக்குப் புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. (அ)

## சுண்டிக்குளி மக்கள் உதவி

யாழ்ப்பாணம், செவ்.

வெளிமாகாணங்களில் இருந்து அகதிகளாக யாழ். நகர் வந்துள்ள மக்களுக்கு உதவும் முகமாக, யாழ்ப்பாணம் சுண்டிக்குளி சனசமூக நிலையத்தின் அங்கத்தவர்கள் தமது பகுதி மக்களிடம் சேகரித்த உணவு, உடை, பணம் முதலியனவற்றை முன்னாள் செனட்டர் திரு. ஜி. நல்லையா தலைமையில் கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் ஒப்படைத்தார்கள். (இ)

# "கடவுளுக்கும் நாட்டுக்கும் தொண்டாற்றுபவரே சாரணர்"

யாழ்ப்பாணம், செவ்.

"கடவுள், நாடு, சமூகம் ஆகிய மூன்றுக்கும் உண்மைத் தொண்டு ஆற்றுபவர் சாரணராவர், உலகில் நிலவும் வேற்றுமைகளை மறக்கவும் வழி சாரணீயமே. மாணவர்கள் மட்டுமல்ல, உலகில் ஆசிரியர்கள், மேதைகள், விஞ்ஞானிகள் பேராசிரியர்கள்கூட சாரணர்களாக இருக்கின்றார்கள். ஆகவே உலகத் தொண்டன் என்று ஒருவர் தன்னை அர்ப்பணிக்க சாரணீயமே வழி."

இவ்வாறு யாழ். மாவட்ட சாரணக் கமிஷனர் திரு. சி. எஸ் சுப்பிரமணியம் பலாலி ஆசிரிய கலாசாலை சினிமா மண்டபத்தில் திரு. செல். ரோச் தலைமையில்நடைபெற்ற சாரணிய பிரச்சாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்,

திரு. எஸ். சுந்தரமூர்த்தி பேசுகையில், நீதி, நேர்மை தேசத்தொண்டு. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியன இளைஞர்களுக்குத் தேவை அதற்குச் சாரணீயமே வழி, பஞ்சமா பாதகங்களை ஒழிக்கவும் சாரணீயமே வழி என்றும் பலாலி ஆசிரிய கலாசாலை அதிபர், உபஅதிபர் சாரணீய வளர்ச்சியில் பெருந்தொண்டு செய்துவருகின்றனர் என்றும் கூறினார், (அ)

## இலங்கை வரும் கோதுமை மா

யாழ்ப்பாணம், செவ்வாய்

பீ. எல். 480 திட்டத்தின் கீழ் அமெரிக்கா இலங்கைக்கு ஒரு லட்சம் தொன் கோதுமை மாவை வழங்கவிருக்கிறது.

இதன் ஒரு பகுதி ஏற்கனவே இங்கு வந்துள்ளதென்றும், மிகுதி மா இன்னும் இரண்டு தினங்களில் இங்கு வந்துசேருமென எதிர்பார்ப்பதாகவும் உணவு ஆணையாளர் தெரிவித்தார். (இ)

## அகதிகளுக்கு உதவக் கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ்

வெளிமாவட்டங்களிலிருந்து அகதிகளாக வந்துள்ள தமிழ் மக்களுக்கு யாழ். மாவட்டத்தில் உள்ள சகல சனசமூக நிலையங்களும் கிராம முன்னேற்றச் சங்கங்களும் தங்கள் நிலையங்கள் மூலம் இயன்றளவு உதவிகளைச் செய்யமாறு யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜ வலி மேற்குக் கிளைச் செயலாளர், சகல மன்றங்களையும் கேட்டுள்ளார்.

இம்மன்றங்கள் பதிவு செய்யப்பட்ட தொண்டர்கள் மூலம், உணவு, உடை ஆகியவற்றைச் சேகரித்து அகதிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் தமது வேண்டுகோளில் குறிப்பிட்டுள்ளார். (இ)

# வன்முறைகள் குறித்து புகைவண்டி ஊழியர் கவலை

கொழும்பு, திங்கள்

நாட்டில் அண்மையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவம் தொடர்பாக புகைவண்டிப்பகுதி ஊழியர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையின் விபரம் வருமாறு:

யாழ். நகரில் நடைபெற்ற பொலிசாரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் அப்பாவித் தமிழர்கள் அநியாயமாகப் பலியானதையிட்டு மனம் வருந்தும் நாம் அத்தகைய காட்டுமிராண்டித்தனமான காவல் படையினரின் செயலைக் கடுமையாகக் கண்டிக்கிறோம். இதைத்தொடர்ந்து நாட்டின் பலபகுதிகளிலும் நடைபெற்றுவரும் கொள்ளை, தீவைப்புச் சம்பவங்களுக்கும் முடிவு காணப்படாவிட்டால் நாடு மிகவும் மோசமான சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டுவிடுமென்பதை அரசினர் உணர்ந்து உடனடிப் பரிகாரம் தேடவேண்டும் என்றும் எமது சங்கம் விரும்புகின்றது. தமிழ்ப்பகுதிகளில் குவிக்கப்பட்டிருக்கும் காவல் படையினரின் அட்டகாசத்தைக் குறைப்பதற்குப் பிரதமர் வேண்டிய ஒழுங்குகளை உடனடியாக மேற்கொள்ளவேண்டும்.

தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபரும், நாட்டின் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் பொலிசாரால் தாக்கப்பட்டார் என்ற செய்தி எமது நாட்டின் ஜனநாயக பாரம்பரியத்திற்கு சாவுமணி அடித்தது போல இருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

எங்கள் தலைவன், எங்கள் மக்கள் சுதந்திரமாக நடமாட முடியாத நிலை எங்கள் நாட்டில் உண்டென்றால் இதைவிட இந்நாட்டில் தமிழன் முற்றாக அழிந்துபோதே மேல்.

# அகதிகள் முகாமில் ஒருசோகக் காட்சி

யாழ்ப்பாணம், செவ்.

பாதிக்கப்பட்ட தமிழ்மக்கள் தங்கியுள்ள முகாம் ஒன்றில் சித்தசுவாதீனமற்ற இளம்பெண் ஒருவர் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இவர் தமது பெயரை செல்வி ஜெயசிங்கம் கிருஷ்ணகுமாரி என்றும் வயது 24 என்றும் கூறுகின்றார். மிகச் சாதாரணமாக ஆங்கிலம் பேசும் இவர். சிலவேளைகளில் அழத்தொடங்கி விடுகிறார். பின்னர் சிறிது நேரத்தில் இறந்து போனதமது தந்தையை நினைவுகூர்கின்றார். இவரது பேச்சிலிருந்து இவரது தகப்பனார் உயிருடன் தீவைக்கப்பட்டிருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது. மிகப்பண்பாகவும் பணிவாகவும் பேசும் இவரது சொந்த இடத்தையோ அல்லது உறவினர்களையோ சொல்கிறாரில்லை. தற்போது கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்திலுள்ள முகாமிலே இவர் தங்கியுள்ளார். (கா-அ)

# "விலை கூட்டிவிற்கிறார்களே!"

## உதவி அரசாங்க அதிபரிடம் புகார்

உடுப்பிட்டி, திங்கள்

நெல்லியடியில் வர்த்தகர்கள் சகல பொருட்களையும் அதிக விலைக்கு விற்று வருவதை ஆட்சேபித்து இப்பகுதி இளைஞர்கள் கரவெட்டி உதவிஅரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளனர்.

இம் மகஜரில், தேங்காய் எண்ணெய், சீனி, சர்க்கரை போன்ற பொருட்களை நெல்லியடிப்பகுதி வர்த்தகர்கள் கூடிய விலைக்கு விற்பதாகவும், சில வர்த்தகர்கள் பதுக்கி வைத்திருப்பதாகவும், இதனால் பொது மக்கள் மேற்படி பொருட்களைப் பெற்றுக் கொள்ள முடியாது மிகவும் கஷ்டப்படுவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இப்பொருட்களைத் தட்டுப்பாடு இல்லாமலும், மலிவாகவும் பெறுவதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்து தருமாறு கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு எம். வேலும்மயிலிடம் கேட்கப்பட்டுள்ளது.

## திரும்பிய டாக்டர்கள்

பண்டத்தரிப்பு, திங்கள்

வெளிமாகாணங்களிலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் கடமையாற்றிய பல வைத்தியர்களும் பதிவுபெற்ற வைத்திய அதிகாரிகளும் அங்கு கடமையாற்ற முடியாது கலவரங்களினால் பாதிக்கப்பட்டு தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பியுள்ளார்கள். இவர்களைத் தங்கள் சொந்த இடங்களிலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் மறுஅறிவித்தல் கொடுக்கும்வரை கடமையாற்றுமாறு யாழ். மாவட்ட சுகாதார சேவை அத்தியட்சகர் அனுமதி வழங்கியுள்ளார்.

# பாதிக்கப்பட்ட வெளிமாவட்ட ஆசிரியர்க்கு 50 வீத சம்பளம்

யாழ்ப்பாணம், செவ்
நாட்டில் நிகழ்ந்தவன்செயல்களினல் பாதிக்கப்பட்டு, தங்கள் பகுதிகளுக்குத் திரும்பவும் செல்லமுடியாத வெளிமாவட்ட ஆசிரியர்களுக்கு, வியாழன், வெள்ளிக்கிழமைகளில் யாழ். கல்வித் திணைக்களத்திலும் வட்டாரக்கல்வி அதிகாரி காரியாலயங்களிலும் 50 வீதமான சம்பளம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஆசிரியர்கள் தங்கள்வரவைப் பதிவு செய்வதற்காக, 12பாடசாலைகள் நியமிக்கப்பட்டுள்ளன. இவர்கள் விரும்பினல், கல்வித்திணைக்களத்திலும்,வட்டாரக் கல்வியதிகாரிகளின் காரியாலயத்திலும் தங்கள் வரவை வைத்துக்கொள்ளலாம். ஆனல் சேவைக்கு செல்லும் வரை ஒரே இடத்தில் கையொப்பமிடல்வேண்டும்.

நேற்று நடைபெற்ற இலங்கை ஆசிரியர்சங்கவிசேட கூட்டத்தில் இத்தகவல்கள் வெளியிடப்பட்டன. நல்லூர் சாதன வித்தியாசாலையில், இலங்கைத் தமிழாசிரியர் சங்க நிர்வாகச்செயலாளர் திரு. அ. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் 1000க்கு அதிகமான ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.

ஆசிரியர்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்கள்,ஊறுகள்,பொருட்சேதங்கள் என்பன பத்திரங்கள் மூலம் திரட்டப்பட்டன. பெண்ஆசிரியைகளின் உயிர் உடைமைகளுக்கு ஊறுவிளையுமென சந்தேகித்தால் அவர்கள் சேவைக்குப் போகவேண்டாம் எனவும் கூறப்பட்டது. நெருக்கடியான இந்த நேரத்தில் எந்தச் சங்கப் பிரமுகராயிருந்தாலும் அவர்களுக்கு சகல உதவிகளையும் இலங்கைத் தமிழாசிரியர்சங்கம் வேற்றுமையின்றி வழங்குமென்று மேற்படி ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு. ந. பாலசுப்பிரமணியம் கூறினர்.

கூட்டத்தில் கலந்துகொண்ட யாழ். மாவட்டக் கல்வியதிபதி, திரு. க. சிவநாதன் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு அனுதாபம் தெரிவித்தார். பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, கந்தர்மடம் சைவ வித்தியாசாலை, அச்சுவேலி மத்திய வித்தியாலயம், சுன்னகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி, தெல்லிப்பழை யூனியன்கல்லூரி, புங்குடுதீவு ம. வித்தியாலயம், பளை ம. வித்தியாலயம், கிளிநொச்சி ம. வித்தியாலயம், நெல்லியடி ம. வித்தியாலயம், பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி, சாவகச்சேரி றிபேக் கல்லூரி ஆகியவற்றில் வரவைப் பதிவு செயதுகொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன (கெ)

# தகவல் சேகரிக்கும் குழு நியமனம்

யாழ்ப்பாணம், செவ்.
நாட்டின் பலபாகங்களிலும் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களினல் பாதிக்கப்பட்ட தமிழ்மக்களிடம் இருந்து தகவல்களைச் சேகரிக்கும் குழு ஒன்று தமிழர் விடுதலைக் கூட்டணியினரால் நியமிக்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாணப் பகுதிகளில் உள்ள அகதிகள் முகாம்களில் தங்கியுள்ள பாதிக்கப்பட்ட தமிழர்களிடம் இருந்து தற்போது தகவல்கள் சேகரிக்கப்பட்டுவருகின்றன.

கனகரத்தினம் மத்தியமகா வித்தியாலயத்திலுள்ள அகதிகள் முகாமிற்குப் பொறுப்பாகச் சட்டத்தரணி மு. ஆலாலசுந்தரமும் யாழ். இந்துக் கல்லூரியிலுள்ள முகாமிற்குப் பொறுப்பாக தமிழ் இளைஞர் பேரவையைச்சேர்ந்த வண்ணை ஆனந்தனும் நியமிக்கப்பட்டுள்ளனர் சம்பவங்களை நேரில் பார்த்தவர்கள் முகாம்களில் இல்லாவிட்டாலும் இவர்களிடம் தகவல்களைக் கொடுக்குமாறு இக்குழுவின் தலைவர் திரு. சு. நடராசா கேட்டுக்கொண்டுள்ளார். (கா அ)

# "நேரில் பார்த்தவர்கள் தொடர்பு கொள்க"

யாழ்ப்பாணம், செவ்.
யாழ். நகரில் கடந்த 16ம் திகதி இடம்பெற்ற கலவரத்தில் சம்பவங்களை நேரில்பார்த்தவர்கள் இன்று பிற்பகல் 3 மணி தொடக்கம் 6 மணி வரை தமிழர் விடுதலைக் கூட்டணிக் காரியாலயத்துடன் தொடர்புகொள்ளுமாறு சட்டத்தரணி திரு. எஸ். நடராசா கேட்டுக்கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இம்மாதம் 16ம் தேதி நடந்த கலவரத்தில் பழைய மார்க்கட்டிலுள்ள பாய்க்கடை எரிந்ததுபற்றியும், ஆஸ்பத்திரி வீதியிலுள்ளகடைகளுக்கு ஏற்பட்ட சேதம்பற்றியும் அன்று நடந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தையும் நேரில் கண்டவர்கள், நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க தருணம் கிடைத்துள்ளதாக, இறந்தவர்களின் நலனைக்கவனித்த ஆஜரான சட்டத்தரணி எஸ். நடராசா தெரிவித்துள்ளார்.

**மரண விசாரணை**

யாழ்ப்பாணத்தில் நடந்த கலவரத்தில் பலியானவர்களின் மரணவிசாரணை யாழ். நீதவான் திரு. கே. வி. நவரத்தினம் முன்னிலையில் நேற்று நண்பகல நடைபெற்றது.

நாளைக் காலை 9 மணிக்கு மரணவிசாரணை தொடர்ந்து நடைபெறும்.

இறந்தவர்கள் நலன்கருதி ஆஜரான சட்டத்தரணிகள் நாளை சாட்சிகளை ஆஜர்செய்வார்கள். (க-அ)

# வழமைக்குத் திரும்பும் யாழ். நகரம்

யாழ்ப்பாணம், செவ்வாய்
இரண்டு கிழமைக்குப்பின்னர் மீண்டும் யாழ்ப்பாண நகரத்தில் வழமை திரும்பியுள்ளது. நேற்று பெரிய கடைப் பகுதி மீண்டும் கலகப்பாக காணப்பட்டது

பஸ் நிலையத்தில் 25 கடைகள், எரிந்ததை தொடர்ந்து, அச்சத்தினல் தங்கள் கடைச் சாமான்களை வீட்டிற்கு கொண்டு சென்றவர்கள், நேற்று அவற்றை திரும்பவும் கடைகளுக்கு கொண்டுவந்தார்கள்.

நவீன மார்க்கட், பெரிய கடைப்பகுதிகளில், பெரும்பாலான கடைகள். வழக்கம் போல் திறக்கப்பட்டு வியாபாரம் நடைபெற்றது.

சில கடைகளில் சாப்பாடு, சோடா விலைகள் அதிகரிக்கப்பட்டிருந்தது. சிகரட் 50 சதமாக விற்பனை செய்யப்பட்டது.

யாழ்.பெரிய ஆஸ்பத்திரியிலும், நேற்று வழமைபோல் நோயாளிகள் பெருமளவில் காணப்பட்டனர். தேநீர்க் கடைகள், ஹோட்டல்கள் யாவும் திறக்கப்பட்டு நேற்று வியாபாரம் நடைபெற்றது

தீக்கிரையான பழைய மார்க்கட் பகுதிகளில் நேற்று, வாழைப்பழக்கடை, வெற்றிலைக் கடைகள் வழக்கம்போல் நடைபெற்றது. மரக்கறிக் கடைகளும் வழக்கம்போல் திறக்கப்படவில்லை.

பஸ் சேவைகள் வழமை போல் நடைபெற்றது. பஸ் நிலையத்தில் மீண்டும், வழக்கம் போல் பிச்சைக்காரர்களும் அனுதைகளும் காணப்படுகின்றனர். (கா)

# கூட்டணி காரியாலயம் எரிந்ததுபற்றி விசாரித்தேன்

யாழ்ப்பாணம், செவ்
தமிழர் விடுதலைக்கூட்டணி காரியாலயம் எரிந்தது பற்றி விசாரணை செய்வதற்குத்தான் சென்றதாகவும், விருந்தையும் சுவரும் எரிந்த அடையாளம் இருந்ததாகவும், மண் எறிந்து நூற்றமாதிரியும் காணப்பட்டதாகவும், யாழ். கலவர சம்பவத்தில் பலியானவர்களின் மரணவிசாரணையில் சாட்சியமளித்த சப்இன்ஸ்பெக்டர் கிளெமென்ட் பெரேரா கூறினர்.

யாழ். நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. வி. நவரத்தினம் முன்னிலையில் நேற்று நண்பகல் இவ்விசாரணை நடைபெற்றது

சப் இன்ஸ்பெக்டர் கிளேமெண்ட் பெரேராமேலும்சாட்சியமளிக்கையில், கடைகள் எரிந்தது பற்றி குறிப்புஎடுத்து விசாரணை செய்ய தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் தம்மை அனுப்பியதாகவும், தான் அங்குசென்றபோது டயரும் சாமான்களும் எரிந்து கொண்டிருந்ததாகவும் பழைய மார்க்கட் கூரை உட்பட முழுவதும், எரிந்த நிலையில் இருந்ததாகவும், போத்தல்களும், இரும்புத்துண்டுகளும் காங்கேசன்துறை வீதியில் காணப்பட்டதாகவும் கூறினர்.

சம்பவம் நடந்த இடத்தில் ஒருதரும் இல்லை என்று கூறிய சப்இன்ஸ்பெக்டர், பின்னர் சிலர் வந்து முறையிட்டதாகவும் கூறினர்.

எப்படி எரிந்ததென்று எவரும் கூறவில்லையென்றும், நீதவான் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் கூறினர்.

வெலிங்டன் தியேட்டர் சந்திக்கருகிலும், சி. எஸ்.ஜே சந்தியிலும், எரிந்து நார்ந்து கொண்டிருந்தநிலையில் காணப்பட்டதாகவும் அவர் கூறினர்.

பொலிஸ் தரப்பில் உதவிப் பொலிஸ் அதிபர் திரு சில்வா ஆஜரானர். இறந்தவர்களின் நலனைக் கவனிக்க சட்டத்தரணிகள் எஸ். நடராசா, ஜிம்மி இராசரத்தினம், ஆர். விஸ்வநாதன், த. சோமசுந்தரம்ஆகியோர் ஆஜரானர்கள்.

விசாரணை நாளைக்கா [illegible] 9 மணிவரை ஒத்திப்போடப்பட்டுள்ளது (க)

# ராட்சத சுறு!

உடுப்பிட்டி, திங்
இக்கம் கடற்கரையில் ஒதுங்கிய இராட்சத சுறுவின் சடலம் மீண்டும் நடுக்கடலில் தள்ளப்பட்டது.

இப்பகுதிமீனவர்கள் கடலில் மீன்பிடிப்பதற்காக வலைவீசியபோது மிகப்பாரமான ஏதோ சிக்கவே மிகவும் சிரமப்பட்டு வலையை இழுத்துவந்து கரையில் பார்த்தபோது 100அடி நீளமான இராட்சத சுறுஒன்று இறந்த நிலையில் வலையில் சிக்கி இருந்தது

திக்கம் கடற்கரையில் இந்த ராட்சதசுறுவைப் பெருந்திரளானேர் சென்றுபார்த்தனர். இச்சுறுவைக் கரையில் அடக்கம் செய்யமுடியாத நிலையில் மீனவர்களால் மீண்டும் கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டு நடுக்கடலில் தள்ளப்பட்டது. (அ)

# "இவர்களை இடமாற்றம் செய்யாதீர்"

**— வவனியா எம். பி.**

யாழ்ப்பாணம், செவ்வாய்
வவனியா பொலிஸ் நிலயத்தில் கடமை புரியும் இரு பொலிஸ் அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்படவிருக்கின்றனராம். இவர்கள் இருவர் மட்டுமே தமிழ் தெரிந்த பொலிஸ் அதிகாரிகளாவார். இவர்களை இடமாற்றம் செய்தால் வவனியாவில் மீண்டும் பொலிஸ் பகுதியினரால் பதற்ற நிலை உருவாகலாமென பொதுமக்கள் அச்சம் கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

இவர்களை எச்சந்தர்ப்பத்திலும் இடமாற்றம் செய்யக் கூடாதென வவனியா தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. தா. சிவசிதம்பரம் நேற்று நடைபெற்ற உயர் அதிகாரிகள் மகாநாட்டில் வலியுறுத்தியுள்ளார். (கெ-அ)

யாழ். நகரில்

# பேக்கரியில் தீ: பொலிஸார் அணைத்தனர்

யாழ்ப்பாணம், செவ்வாய்
யாழ்ப்பாணம் பஸ்நிலையத்திற்கு எதிரிலுள்ள பேக்கரியில் நேற்றுக் காலை தீப்பிடித்தது. பொலிஸார் உடனடியாகத் தீயை அணைத்தனர்.

நேற்றுக் காலை 9 மணியளவில் பூட்டப்பட்டிருந்த பேக்கரிக்கு உள்ளே தீப்பிடித்துப் பக்கத்துக் கடை ஊடாகப் புகை கிளம்பியதை அவதானித்த பொதுமக்கள் உடனடியாகப் பொலிஸாருக்கு அறிவித்தனர்

பொலிஸார் உடனடியாக டிரக்கில் அவ்விடத்திற்கு விரைந்து வந்து தீயை அணைப்பதில் ஈடுபட்டனர்

பின் பக்கத்தால் உள்ளே சென்ற பொலிஸார் மற்ற இடங்களுக்குத் தீ பரவு முன் அணைத்துவிட்டனர். இதுபற்றிப் பொலிஸார் விசாரணை செய்துவருகின்றனர். (க-அ)

# மரண அறிவித்தல்

## J. A. T. சேதுகாவலர்

கோப்பாய், 85, பருத்தித்துறை வீதியைச் சேர்ந்தவரும், யாழ்.மத்திய கல்லூரி ஆசிரியருமான ஜே.ஏ.ரி. சேதுகாவலர் காலமாகிவிட்டார். இவர் லிடியாவின் அன்புக்கணவரும், ஹர்ஷனின் தந்தையும், நேசி,பாக்கியனின் சகோதரரும், வி எஸ்.ஏ. புள்ளநாயகம் (முன்னைநாள் சொலிஸ்ரார் ஜெனரல்) செல்வம், இராசையா, லீலா, மஞோவின் மைத்துனருமாவார், அன்னரின் பூதவுடல் புதன்கிழமை (31-8-77) ம் திகதி மாலை 3.30 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு, கோப்பாய் புனிதமரியாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

6914

# மரண அறிவித்தல்

## திருமதி.ச.பொன்னம்மா

திருமதி பொன்னம்மா காலமாகிவிட்டார். இவர் காலம் சென்ற பரமநாதரின் அன்பு மனைவியும், யோகராசா (இ. போ.ச யாழ்ப்பாணம்) நவரத்தினம் (பொலிஸ் கண்டி), பத்மாவதி ஆகியோரின் தாயாரும், சுந்தரலிங்கம் (கச்சேரி யாழ்ப்பாணம்),கமலாம்பிகை, கனகாம்பிகை (ஆசிரியை கண்டி) ஆகியோரின் மாமியாரும் ஆவார். அன்னரின் பூதவுடல் 31-8-77 புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு, 60, சந்தனமாதா கோவில் ஒழுங்கையிலுள்ள அன்னரின் இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

6915

# உணவுப் பொருள்கள் விநியோகத்தில் தட்டுப்பாடில்லை

கொழும்பு, திங்கள்
யாழ்ப்பாணம் உட்பட நாட்டின் சகல பகுதிகளுக்கும் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் வழமைபோல் அனுப்பி வைக்கப்படவிருக்கின்றது.

வர்த்தக அமைச்சர் திரு. அத்துலத் முதலியின் உத்தரவின் பேரிலேயே இந்நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இதேவேளை, யாழ்ப்பாணத்திலிருந்து ரயில், கப்பல், விமானமார்க்கமாகக் கொண்டு வரப்பட்ட மிளகாய், வெங்காயம் கொழும்பிலும், சகல வெளி மாவட்டங்களிலும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

இப்பத்திரிகை 'ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30 ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389. Registerd as News paper in Sri Lanka